1991 ஜூலை, 11]

(ஆ) ஊராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991ஆம் ஆண்டு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன் வடிவு. இதனை பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்." எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : சட்டமுன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

5. விதி 110-இன் கீழ் உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை.

உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் நடைபெற இருப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இப்போது அவர் அறிக்கையை அளிப்பார்.